# தேசமானிய, தேசபந்து, தேசாபிமானி, லங்கா புத்ர, சாசனாபிவுர்தி, தர்மாச்சாரி, மீகொமு புத்ர கீர்த்திரத்ன சமாதான நீதிவான் கனம் டீ. எஸ். டீ சில்வா அவர்கள்

CALTON GROUP OF COMPANIES

மினுவங்கொடை உன்னாருவ என்னும் கிராமத்தில் உல்லாசப் பிரயாண வர்த்தகர் ஒருவரான தினயாதுர பெஞ்சமின் அல்பிரட் டீ சில்வா மற்றும் மனிக்குகே ஆரியவதி டீ சில்வா தம்பதிகளின் தவப் புதல்வனாக சோமச்சந்திர டி சில்வா நீர்கொழும்பில் 1952 திசம்பர் 06ஆம் திகதி பிறந்தார். இரண்டு சகோதரர்களினதும் மூன்று சகோதரிகளினதும் மூத்தவரான இவர் தமது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு பீல்லவத்த கனிஷ்ட வித்யாலயத்தில் பெற்றார். பின்னர் மினுவங்கொடை ஹீனட்டியன தர்மாலோக மத்திய மகா வித்யாலயத்தில் கல்வி பயின்று 1968 திசம்பர் மாதத்தில் க.பொ.த.ப. (சாதாரண தரப்) பரீட்சையை முடித்துக்கொண்டதன் பின்னர் தமது தந்தையின் அடிச் சுவட்டைப் பின்பற்றி தமது தந்தையின் வியாபாரத்தில் ஒத்துழைத்தார். அக்காலப் பகுதியில் தாம் அடைந்த துன்பங்களையும் சிரமங்களையும் கசப்பான அனுபவங்களையும் ஒரு வரப்பிரசாதமாக ஏற்றுக்கொண்டு அவதானத்துடனும் நிதானத்துடனும் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றினார்.

இக்காலக்கட்டத்தில் தமது வாலிப பருவத்தை எய்தியிருந்த செல்வன் சோமச்சந்திர சில்வா ஹீனட்டியவில் வசித்துவந்த கே. ஓலிவர் சில்வா, வை. ஏவிஜின் சில்வா தம்பதியின் அன்புப் புதல்வியாகிய குருவிகார சுதர்மா காந்தி டீ சில்வா விக்ரமசிங்க என்னும் திருநிறைச் செல்வியை 1979 ஆகஸ்ட் 20ஆம் திகதி கரம்பற்றினர்.

அன்றுதினம் தமது தந்தையால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 24 ஸ்ரீ 6830ஆம் இலக்கம் கொண்ட லொறி ஒன்றையும் ரூபா 6000.'.- பணத்தொகையொன்றையும் மட்டுமே பக்கபலமாகக் கொணடு வர்த்தக உலகில் தனித்து நின்று காலடி எடுத்துவைத்தார். 1979-1983 காலப் பகுதியில் மினுவங்கொடை உன்னாறுவயிலிருந்து தேங்காய், அன்னாசி ஆகிய விளைபொருட்களை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச்சென்று அங்கிருந்து நீர்கொழும்பிற்கும் மினுவங்கொடைக்கும் கருவாடு, மிளகாய், வெங்காயம் வாழை போன்றவற்றை ஏற்றிவந்தார்.

1980 யூலை 2ஆம் திகதி ஒரு மழலைச் செல்வத்திற்கு இத்தம்பதியினர் பெருமை மிக்க தாயும் தந்தையுமாயினர். இக்குழந்தைக்கு சானுக ரோஷான் சோமச்சந்திர டீ சில்வா எனப் பெயரிட்டனர். இக்குழந்தை இவர்களுக்கு வாழ்க்கையில் கிடைத்தற்கரிய ஒரு செல்வமாகத் துலங்கியது. ஒரு தந்தைக்குரிய கடமைகளைச் சரிவர உணர்ந்திருந்த இவர் குழந்தையின் ஆரம்பக் கல்வியின் பொருட்டு அதனை நீர்கொழும்பு ஹரிஸ்சந்திர தேசிய பாடசாலையிற் சேர்த்துப் பின்னர் சானுக உயர்கல்விக்காக அவுஸ்திரேலியாவிலுள்ள மொனாஸ் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து அங்கு சந்தைப்படுத்தும் துறையில் பட்டதாரிப் பட்டம் பெற்றார். தற்பொழுது இவர் கல்டன் வர்த்தகத் தொகுதியில் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

1983 செப்டெம்பர் 24ஆம் திகதி இத்தம்பதிக்கு மற்றுமொரு செல்லக் குழந்தை பிறந்தது. இவருக்கு சத்துர பிரஷான் சோமச்சந்திர டீ சில்வா எனப் பெயரிடப்பட்டது. இவர் தனது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு ஹரிஸ்சந்திர தேசிய பாடசாலையில் முடித்துக்கொண்டு உயர் கல்விக்காக நியூசீலாந்து லிங்கன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உணவு மற்றும் வணிகத் துறையில் பாடநெறியொன்றை மேற்கொண்டுள்ளார். 1985 ஆகஸ்ட் 22ஆம் திகதி இக்குடும்பத்திற்கு மற்றுமொரு வரப்பிரசாதம் கிட்டியது. அதாவது மூன்றாவது ஆண் குழந்தையொன்றும் வந்துதித்தது. மஹேஷ் நிஷான் சோமந்சந்திர டீ சில்வா என்ற பெயர்கொண்ட இச்சிறுவன் தனது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு ஹரிஸ்சந்திர தேசிய பாடசாலையில் முடித்துக்கொண்டு இப்பொழுது நியூசீலாந்து கென்றபறி பல்கலைக் கழகத்தில் பொறியிலாளர் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறாக தமது பிரதேசத்தில் தமது நற்பெயரை பேணிக் காத்துக்கொண்டு தமது கடமைகளையும் பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றி வருவதோடு மூன்று நற்பிரசைகளையும் உருவாக்கியுள்ள இவர் சிறுவயதிலிருந்தே வர்த்தகத் துறையில் தாம் பெற்ற அனுவத்தைக் கொண்டு 1983ஆம் ஆண்டு நான்கு ஊழியர்களுடன் ஆரம்பித்த கெல்டன் ஸ்டோர்ஸ் என்னும் பெயரில் தமது வியாபாரத்தை நீர்கொழும்பு நகரில் அறிமுகம் செய்துவைத்துள்ளார். இந்த வியாராத்தின் ஊடாக பாவனையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களது சேவையை திறப்பட நிறைவேற்வதற்கு அயராது உழைத்தார். அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்கென பொழுது புலர்ந்ததும் முதல் முதலாக திறக்கப்படுவது கெல்டன் ஸ்டோர்ஸ் ஆகும். அதே போன்று நகரிலுள்ள அனைத்து வியாபார நிலையங்களும் மாலையில் மூடப்பட்டபின்னரே இந்த வியபாராம் நிலையம் மூடப்படும். இதன்மூலம் பாவனையாள்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு இந்நிறுவனம் வசதியளித்தது. வாடிக்கையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று அன்போடு உபசரித்து அவர்களுக்குப் பணிவிடை புரிவது இந்த நிறுவனத்தின் ஒரு விசேட அம்சமாகும். தமது அலவல்கள் முடிந்து வீடு திரும்பும் வழியில் பாவனையாளர்களின் பிரயாணச்செலவைத் தாமே பொறுப்பேற்று வழியிலுள்ள பாவனையாளர்களின் வீடுகளுக்கு அல்லது கடைகளுக்கு அவர்கள் கேட்டிருந்த பொருட்களைத் தாமே கொண்டுசென்று ஒப்படைப்பதன் மூலமும் குறுகிய காலத்தில் சிக்கனமான விலைகளில் பொருட்களை விநியோகிப்பதன்மூலமும் பாவனையாளர்களின் ஆழந்த நம்பிக்கையை இவர் வெற்றிக்கொண்டார். அத்துடன் இவரது விற்பனைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தமை இந்நிறுவனத்தின் ஒரு சிறப்பம்சமாகும்.

வெளிநாடுகளிலிருந்து நீர்கொழும்பிற்கு வருகை தரும் மக்களுக்கு உணவும் பானங்களும் பெற்றுக்கொள்வதற்குத் தரமான ஓரிடம் அவசியம் என்பதனை உணர்ந்துகொண்ட இவர் 1990ஆம் ஆண்டு பன்னிரண்டு ஊழியர்களின் ஒத்தாசையுடன் பதினைந்து தட்டுகள் அடங்கிய வெதுப்பகம் ஒன்றை ஆரம்பித்தார். இத்துறையில் இவருக்குப் போதிய அறிவும் அனுபவமும் இருக்கவில்லையாதலால் பேக்கரி தொழிலில் அனுவம்கொண்டவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து இரவு பகல் என்று பாராமல் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இத்துறையில் தேர்ச்சிபெற்றார். இவர் சமுதாயத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பாராட்டுமுகமாக 1991ஆம் ஆண்டு இவர் ஒரு சமாதான நீதிவானாக நியமனம் பெற்றார்.

இவரது அயராத உழைப்பையும் புத்திக்கூர்மையையும் இவர் அடைந்த வெற்றிகளையும் கண்ட ஓரியன்ட் டிரெடிங் கம்பனி, நெஸ்லே லங்கா, கொகா கோலா நிறுவனம், சீ.பீ.சீ. லங்கா ஆகிய நிறுவனங்கள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை நீர்கொழும்பு நகரில் சந்தைப்படுத்துவதற்கென சந்தைப்படுத்தும் முகவராக உயர்திரு சோமச்சந்திர அவர்களை நியமித்தன.

இவரது வியாபார நடவடிக்கைகள் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்த நிலையில் வர்த்தகத்துறையில் இவரது பாரிய முயற்சிகளுக்கு மகுடம் சூட்டும் வகையில் 1996ஆம் ஆண்டளவில் 54 ஊழியர்களை தொழிலில் ஈடுபடுத்தி நவீன உகரணங்கள், பொறித் தொகுதிகள் என்பவற்றின் உதவியுடன் மிகவும் சுத்தமான முறையில் சுவை மிகுந்த தின்பண்டங்களால் பாவனையாள்களின் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு கெல்டன் ஸ்வீட் ஹவுஸ் பிறைவட் லிமிட்டெட் என்ற பெயரில் பேக்கரியொன்றை கட்டுநாயக நகரின் மத்தியில் ஆரம்பித்தார்.

அதனையடுத்து வெவ்வேறு இடங்களில் கிளைகளை ஆரம்பித்து கெல்டன் உற்பத்திப் பொருட்களின் இன்சுவை உணவுகளை ஏனையோரும் சுவைத்து மகிழும் இனிய வாய்ப்பினை இவர் ஏற்படுத்திக்கொடுத்தார்.

பேக்கரி தொழிலை மிகச்சிறந்த முறையில் கொண்டு நடாத்தி வந்தததன் மூலம் இவர் அநேகருக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தமை சமுதாயத்திற்கு இவர் ஆற்றிய அரிய சேவைகளுள் ஒன்றாகும். பிரபல வர்த்தக நிறுவனங்கள் திரு. சோமச்சந்திர அவர்களைத் தமது வியோகத்தராக நியமித்தது மட்டுமல்லாமல் யுனிலிவர் ஸ்ரீ லங்கா லிமிட்டெட் நிறுவனமும் நீர்கொழும்பு நகரில் இவரை அதன் சந்தைப்படுத்தும் முகவராக நியமனம் செய்தது.

எப்பொழுதும் மக்களுக்குத் தமது புத்தாக்கங்களை அறிமுகம் செய்துவந்த திரு. சோமச்சந்திர 2007ஆம் ஆண்டு நவீன தோற்றத்திலான கெல்டன் ஹைப்பமார்கட் என்னும் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

இதே போன்று கொழும்பு மாநகருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கிளடிங் ஷீட் வெளியூர்களிலுள்ள பாவனையாளர்களுக்கும் இலகுவில் போட்டாபோட்டி விலையில் விற்பனை செய்வதன்மூலம் மக்களுக்குக் கிடைக்கும் நன்மையை கருத்திற்கொண்டு நவீன தொழில்நுட்பவியலிற்கிணங்க உற்பத்தி செய்யப்பட்ட 4 மில்லி மீட்டர் கனமுள்ள 20 வருட உத்தரவாதம் கொண்ட பல்வேறு வர்ணங்களிலான கிளடிங் தகடுகளின் விற்பனையை இவர் ஆரம்பித்து வைத்தார். கிபொன்ட் (ஞடீழுனோ) கிளடிங் என்ற பெயரில் விற்பனையாகும் இத்தகடு இலங்கையில் விற்பனையாகும் கிளடிங் தகடுகளில் முன்னிலையில் திகழ்கின்றது.

நாட்டின் உற்பத்தியை முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்துடன் ஊஊஆ அக்ரோ என்னும் பெயரில் பழவகை மற்றும் காய்கறி விற்பனையிலும் இவர் ஈடுபட்டுள்ளார்.

வர்த்தகத்துறைக்கு மாத்திரம் இவர் தமது உழைப்பைப் பயன்படுத்தவில்லை. நீர்கொழும்பிலும் அதனை அண்டிய நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் பௌத்த விஹாரைகளிலும் தேவாலயங்களிலும் வேறு எந்தவொரு பொது இடங்களிலும் நடைபெறும் பொதுப்பணிகளுக்கும் இவர் தமது பங்களிப்பைச் செய்துள்ளார். சிறுவர்களின் கலைத் திறன்களை ஊக்குவிப்பதற்காக தேசிய கலா மன்றத்துடன் இணைந்து ஓவியப்போட்டிகள் நடத்துதல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டுவரும் இவர் பின்வரும் இடங்களில் அங்கத்துவமும் பதவியும் வகிக்கின்றார்:

- நீர்கொழும்பு அகுருகாரமுல்ல பௌத்த சங்கத்தின் போஷகர்
- சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலதிபர்கள் சங்கத்தின் போஷகர்
- நீர்கொழும்பு வர்த்தகர் சங்கத்தின் உறுப்பினர்
- அகில இலங்கை பௌத்த மஹா சம்மேளத்தின் ஆயுள் உறுப்பினர்
- இலங்கை போசத் மன்றத்தின் அனுசரணையாளர்
- நீர்கொழும்பு பௌத்த நற்பணி மேம்பாட்டு சங்கத்தின் உறுப்பினர்
- மௌபிம லங்கா மன்றத்தின் சூர்ய சிங்க நகரின் பிரதிநிதி

கிராமிய கைத்தொழில் மற்றும் சுய தொழில் ஊக்குவிப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட கைத்தொழில் துறையில் சிறந்த கைத்தொழிலதிபர்களுக்கு சனாதிபதியின் விருது வழங்கும் போட்டியில் உணவு மற்றும் உற்பத்தித் துறையில் கம்பஹா மாவட்டத்தில் இவர் முதலிடம் பெற்றார்.

நீர்கொழும்பு மக்களுக்கு இவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டுமுகமாக 2007ஆம் ஆண்டு நீர்கொழும்பு நகராதிபதியால் நீர்கொழும்பு புத்ர கீர்த்திரத்ன என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பௌத்த மதத்திற்கு இவர் ஆற்றிய சேவைக்காகவும் இவரது தார்மீக வாழ்கையைப் பாராட்டுமுகமாகவும் 2008ஆம் ஆண்டு லங்கா அமரபுர மஹா நிக்காயவின் சாசனாபிவுர்தி தாயக தர்மாச்சாரிய என்னும் கௌரப்பட்டமும் இவருக்கு அளிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில்இலங்கை ஐக்கிய சங்கத்தால் நடத்தப்பட்ட விழாவில் இவருக்கு தேசமான்ய, தேசாபிமானி, லங்கா புத்ர ஆகிய கௌரவப் பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

2008ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா வியாபார விபூஷண, சமாஜ சேவா விசாரத ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

இவரது மனதில் உதித்தி உன்னத நோக்கங்களின் பயனாக கெல்டன் வர்த்தக் தொகுதியில் முந்நூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேரடியாக சேவை புரிகின்றனர். மேலும் தொளாயிரத்திற்கும் அதிகமானோர் இந்த ஊழியர்களில் தங்கி வாழ்ந்து தங்கள் வாழ்க்கையை இனிதே நடத்திக் கொண்டிருக்கின்றனர்.